## பகுதி 3

1979 ஆம் ஆண்டில் நாணயச்சபையால் மேற்கொள்ளப்பட்ட முதன்மையான வழிமுறைகள்.


1. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு வங்கி நீதியிடலுக்கான ஏற்பாடுகளின் வழிமுறைகள் - சுற்றறிக்கை எண். 379 (i)

2. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் சுற்றறிக்கை எண்-380 (வெ நா வ தி 1/79) (ii)

3. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் சுற்றறிக்கை எண்-381 (வெ நா. வ. தி. 2/79) (vi)

4. வர்த்தக வங்கிக் கொடுகடன் - சுற்றறிக்கை எண். 395 (vi)

5. வர்த்தக வங்கிக் கொடுகடன் - சுற்றறிக்கை எண். 418 (vii)

6. வர்த்தக வங்கிக் கொடுகடன் - சுற்றறிக்கை எண். 419 (vii)

7. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் குடுப்பிட்ட நாணயங்கள் - தொடர்பு எண். வெ. நா. வ. தி. 3/79 வநா / எப். 1049/79 (ix)

8. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் - சுற்றறிக்கை எண் வெ. நா. வ. தி. 4/79 (x)

9. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம் - சுற்றறிக்கை எண். வெ நா வ தி 5 / 79 (xi)

10. ஆசிய நாணயக்கூறு, வங்காள தேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபா, ஈரானிய ரியால், நேபாள ரூபா, பாகித்தான் ரூபா, ஆகியவற்றின் தந்தி மாற்றல்களுக்கான மத்தி வங்கியின் செலாவணி வீதங்கள். (xiv)

11. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஊடாக தொழிற்படுவதற்கான மத்திய வங்கியின் செலாவணி வீதங்கள். (xvii)

12. வெளிநாட்டு நாணயத்தாள்களின் கொள்வனவுகளுக்கான வங்கியின் வீதங்கள். (xviii)

சுற்றறிக்கை எண் 379

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ 590,
கொழும்பு 1.
1979 மே, 02

கொ. பெ. பொ. ஆ.வின் முயற்சிகளுக்கு வங்கி நிதியிடலுக்கான
ஏற்பாடுகளின் வழிமுறைகள்

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச்சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் (கொ. பெ. பொ. ஆ. முயற்சிகள்) கொழும்பு, பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ஒப்பந்தம் செய்துகொண்ட முயற்சிகளுக்கு கீழே தரப்பட்டுள்ள வழிமுறைகட்கு அமைய வர்த்தக வங்கிகள் வங்கித் தொழில் வசதிகளைச் செய்யலாம். இத்தகைய வங்கித் தொழில் வசதிகளைச் செய்து கொடுக்க வர்த்தக வங்கி ஒன்றுக்கு முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் கிளையொன்று இருக்க வேண்டுமென்பது கட்டாயமன்று.

வழிமுறைகள் :

1. கொ. பெ. பொ. ஆ முயற்சிகளுக்கு ரூபா நிதி வசதியை வழங்கும் பொழுது வங்கிகள் 1978 ஒற்றோபர் 25ஆம் நாளின் சட்டம் 7 (ஈ) உள்ளடக்கியுள்ள பின்வரும் குறிப்புக்களை கவனத்தில் கொள்ளல் வேண்டும் சட்டம் கூறுவதாவது :

    ''1978ஆம் ஆண்டின் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 4இன் பிரிவு 17இன் கீழ் தொழில் முயற்சிகளுடன் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தமும் முயற்சிகளுடைய தொழிற்படும் மூலதனம் முழுவதும் இலங்கைக்கு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணய அனுப்பல்கள் மூலம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அல்லது ஆணைக்குழுவினல் நிதி, திட்டமிடல் அமைச்சுடன் கலந்தாலோசித்து தவிர்க்கப்படல் வேண்டும் என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

2. வர்த்தக வங்கியினல் கொ. பெ. பொ ஆ முயற்சிகளுக்கு வழங்கப்படும் கடன்கள், முற்பணங்கள் ஆகியவற்றின் கூட்டுத்தொகை 1978 திசெம்பர் 31ஆம் நாளில் இருந்து மொத்த கடன்கள் முற்பணங்களின் இரண்டு சதவீதத்திற்கு விஞ்சலாகாது. எனினும், இந்த வரையறை வர்த்தக வங்கியின் 1978 திசெம்பர் 31ஆம் நாளின் வைப்புக்களின் மட்டத்திணைவிட அதிகரித்த தொகையில் 20 சதவீதத்திற்கு விஞ்சாமல் அதிகரிக்கலாம்.

3. ஒரு வங்கி கொ. பெ. பொ. ஆ. முயற்சிகளுடனுன கொடுக்கல் வாங்கல்கட்கு தனியாக கணக்குப் பதிவேடுகளை பேணுதல் வேண்டும்.

4. கொ. பெ. பொ. ஆ. முயற்சிகள் நிதித் தேவைகட்கு வெளிநாட்டு மூலவளத்தையே பயன்படுத்தவேண்டுமென்று பொதுவாக எதிர்பார்க்கப்படுவதால் வங்கிகள் மூலமான ரூபா நிதியிடல் மிகவும் குறைவாகவே இருத்தல் வேண்டும். இதற்கமைய கொ. பெ. பொ. ஆ. முயற்சிகளுக்கு வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் மேற்கூறப்பட்ட (2) ஒழுங்குகளுக்கமைய வழங்கப்பட்டிருப்பதால், இவ்வாறு வழங்கப்பட்ட கடன்களுக்கும் முற்பணங்களுக்கும் மத்திய வங்கியின் உதவி கிடைக்கும்; விண்ணப்பங்கட்கு ஏற்றவாறு வரையறுக்கப்பட்ட கடன்பாட்டு ஒழுங்குகளும் கவனிக்கப்படும்.

வெ. சி. சுப்பிரமணியம்
முதன்மைக் கணக்காளர்.

சுற்றறிக்கை எண் 380. (வெ. நா. வ. தி. 1/79)

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு.
1979 மே, 02

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்

1. இச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தில் (வெநாவதி) இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகள் பங்குபற்றலாம்.

2. வெ. நா. வ. திட்டத்தின் கீழ் தொழிற்பாடுகள் வர்த்தக வங்கியின் இந் நோக்கத்துக்காக அமைக்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்டதுமான வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவினுல் (வெ. நா. வ பி) மட்டுமே மேற்கொள்ளப்படலாம்.

3. வெ. நா. வ திட்டத்தின கீழ் செயலாற்ற விரும்பும் வர்த்தக வங்கிகள் அவ்வாறு செயலாற்ற ஒப்புதல்பெற இலங்கை மத்திய வங்கிக்கு விண்ணப்பித்தல் வேண்டும் :

(அ) மத்திய வங்கி பெறுவதற்கு விருப்பும் விபரங்களுடன் வெ. நா. வ,. பிரிவில் கடமையாற்றவிருக்கும் உயர் அலுவர்களது பெயர்கள், அவர்களது கல்வித்தகைமைகள், வங்கித்தொழில அனுபவங்கள் முதலியவற்றைக் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள வர்த்தக வங்கி ஒன்று ஒப்புதல் கோருமிடத்து, அப்பிரிவு குலைக்கப்படுமிடத்து அல்லது வெ. நா. வ. திட்டத்தில் குறை ஏற்படுமிடத்து குறிக்கப்பட்ட நாணயங்களைக் கிடைக்கச் செய்வதாக ஒரு ஒப்புதல் அதன் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4. ஒரு வெ. நா. வ. பிரிவு :

(அ) தவணை, கேள்வி வைப்புக்களை (ஆனால் காசோலை மூலம் திருப்பிப் பணத்தை எடுக்கக்கூடிய சேமிப்புக்கணக்குகளையோ, வேறு கணக்குகளையோ தொடங்கமுடியாது) எந்த வதிவற்றோரிடமிருந்தும் எந்த நாணயத்திலும் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் அத்தகைய தவணை வைப்புக்களைப் பொறுத்தவரையில் அவைகள் பத்தாயிரம் அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு ஈடான தொகைக்கு (ஐ. அ. டொலர் 10,000) குறைந்ததாக இருத்தல் கூடாது.

(ஆ) எந்த வெளிநாட்டு நாணயத்தையும் எந்தத் தொகையிலும் எந்த வதிவற்றோரிடமிருந்தும் கடனாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(இ) எந்த வெளிநாட்டு நாணயத்திலும் எந்த வதிவற்றவர்களுக்கும் எந்த அளவிலும் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கலாம்.

(ஈ) எந்த வெளிநாட்டு நாணயத்திலும் எந்த ஒரு வெ. நா. வ. பிரிவுடனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடலாம்.

(உ) இலங்கை மத்திய வங்கியில் ஒப்புதல் அளிக்கப்படக்கூடிய எந்த வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடலாம்.

5. (அ) ஒரு வெ. நா. வ. பிரிவினது எந்த வதியும் ஒருவரிடமிருந்தும் அதாவது வர்த்தக வங்கியிடமிருந்தும் எந்தக் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத்தினையும் தவணை, கேள்வி வைப்புக்களாக ஏற்றுக்கொள்வதோடு இந்த வதிவாளருக்கு எந்தக் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத்திலும் கடன்களையோ முற்பணங்களையோ வழங்கலாம். அத்தகைய வைப்புக்கள் கடன்கள், முற்பணங்கள் என்பன இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும் ஆகக்கூடிய தொகையைவிட மிகாமலும் ஆகக்குறைந்த தொகையைவிடக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில் ஒரு வர்த்தக வங்கி அதாவது அந்த வர்த்தக வங்கியின் ஒரு பிரிவாக உள்ள வெ. நா. வ. பிரிவு இருக்கின்றதோ அதனையும் உள்ளடக்கி நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளின் கீழ் இத்தகைய வைப்புக்களைச் செய்யவும் கடன்களையும் முற்பணங்களையும் பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கவேண்டும்.

6. ஒரு வெ. நா. வ. பிரிவு :

(அ) தவணை கேள்வி வைப்புக்களை (ஆனால் காசோலைகள் மூலம் பணத்தை மீளப்பெறக்கூடிய சேமிப்புக் கணக்குகளையோ, கணக்குகளையோ தொடங்கமுடியாது) கொ. பெ. பொ. ஆ. வின் முயற்சியாளர்கள் எந்த வதிவாளரிடமிருந்தும் எந்த வெளிநாட்டு நாணயத்தினையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்பண வைப்புக்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள், பணிகள் மூலம் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயமாக இருக்குமிடத்து அத்தகைய முயற்சியாளர் எந்தவித சட்டதிட்டங்களுக்கும் உட்படாதவராகவும். இத்தகைய ஏற்றுமதி வருவாய்கள் மூலம் இத்தகைய வைப்புக்களைச் செய்தல் தொடர்பாக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் செய்துகொண்ட எந்தவித ஒப்பந்தத்துக்கும் கட்டுப்படாதவரும் ஆகின்றார்.

மேற்கூறப்பட்ட (அ) தொடர்பாக ஒரு வெ. நா. வ. பிரிவு வதிவாளரிடமிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் பணிகள், ஏற்றுமதிகள் மூலம் பெறப்பட்ட தொகை மற்றும் அத்தகைய பெறுமதி ஆவணங்கள் உண்டியல்கள் உட்பட, குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்துகையொன்றினைப் பெறல்வேண்டும்.

(ஆ) கொ.பெ.பொ. ஆ வின் முயற்சியாளரான ஒரு வதிவாளருக்கு எந்த வெளிநாட்டு நாணயத்திலும் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கலாம். ஆனால் இது அந்த முயற்சியாளர் இலங்கையில் தொழிற்படுவதற்கு மட்டுமேயன்றி வேறு தேவைகட்கன்று.

7. (அ) வெ. நா. வ. பிரிவானது எந்த வெளிநாட்டு நாணயத்திலும் தவணை கேள்வி வைப்புக்களை ஏற்கவும் (காசோலைகள் மூலம் பணத்தை மீளப்பெறக் கூடிய சேமிப்புக் கணக்குகளையோ, கணக்குகளையோ தொடங்க முடியாது) எந்த வெளிநாட்டு நாண யத்திலும் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கவும் மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மற்ற வதிவாளருக்கும் மத்திய வங்கியினால் ஒப்புதளிக்கக்கூடிய தேவைகட்கு வழங்கவும்,

(ஆ) (அ) வின் கீழ் வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த தொகைக்குக் குறை வாகவும், ஆகக்கூடிய தொகைக்கு கூடுதலாகவும் இருத்தல்கூடாது,

8. ஒரு வெ. நா. வ. பிரிவினது மொத்தச் சொத்துக்களும்/பொறுப்புக் களும் இலங்கை மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் நிர்ணயிக்கப் படும் எல்லைகளை விஞ்சக்கூடாது,

9. ஒரு வெ. நா. வ. பிரிவானது அது ஒரு பிரிவாகவோ திணைக்களமாகவோ இருக்கும் வர்த்தக வங்கியினது ஏனைய தொழிற்பாடுகளினது பதிவுப் புத் தகங்கள் பதிவுகள் என்பவற்றுக்கு புறம்பாக இந்தச் சுற்றறிக்கைக் கிணங்க நடாத்தும் தொழிற்பாடுகள் தொடர்பாக வேறுபட்ட பதிவுப் புத்தகங்களை வைத்திருத்தல் வேண்டும்.

10. வெ. நா. வ. திட்டத்தின் கீழ் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கி இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட கொடுக் கல் வாங்கல் தொடர்பாக அறிக்கைகள் கூற்றுக்கள் தேவை என்று கரு தப்படும்போது மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்,

11. இலங்கை மத்திய வங்கி தனது தீர்மானத்திற்கேற்ப வெ. நா. வ. திட்டத் தின்கீழ் இச்சுற்றறிக்கைக்கிணங்க தொழிற்படும் வர்த்தக வங்கியினை யும் வெ. நா. வ. திட்டத்திலிருந்து விலகும்படியோ அல்லது கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்திக் கொள்ளும்படியோ கேட்டுக்கொள்ளலாம்.

12. (அ) ''வர்த்தக வங்கி'' நாணயச்சட்ட விதியின் 127 ஆம் பிரிவில் உள் ளடக்கிய அதே கருத்தைக் கொண்டுள்ளது.

(ஆ) ''வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவு'' (வெ நா வ பி) என் பது இச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள தேவைகட்காக நிறுவப் பட்ட ஒரு வர்த்தக வங்கியின் பிரிவோ திணைக்களமோ ஆகும். இது கொழும்பு நகரின் அவ்வங்கியின் வியாபார நிலையத்திலோ ஒரு கிளையிலோ அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப் பட்ட ஒரு இடத்திலோ அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) ''வெளிநாட்டு நாணயம்'' என்பது இலங்கை ரூபாவல்லாத ஏனைய எந்த நாணயத்தையும் குறிக்கும்.

(ஈ) ''குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்'' என்பது காலத்துக்கு காலம் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதளிக்கப்படும் வெளி நாட்டு நாணயங்களாகும்.

(உ) ''கொ. பெ. பொ. ஆ. முயற்சி'' என்பது, 1978 ஆம் ஆண்டின் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் எண் 4 கொண்ட சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கொழும்பு பெரும் பாக கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17ம் பிரிவின்கீழ் ஏதாவது ஒப்பந்தம் செய்துகொண்ட எந்த ஒரு முயற் சியுமாகும்.

(ஊ) ''வதிவற்றோர்'' என்பது தனிப்பட்ட ஒருவர், கூட்டு நிலையம், கூட்டு அமைப்பு அல்லது ஏனைய தனிப்பட்டவர் அல்லது ஏனைய இணைக்கப்படாத அமைப்பு அதாவது வதிவினர் என்ற வரைவிலக் கணத்தில் சேர்க்கப்படாததாக இருத்தல் வேண்டும்.

(எ) ''வதிவாளர்'' என்பது

(1) இலங்கையில் வதியும் ஓர் இலங்கைக் குடிமகன்.

(2) இலங்கையின் குடிமகன் அல்லாத ஒருவர் ஆனால் குறைந்தது ஆறு மாதங்கட்கு வதிந்தவர் அல்லது தொடர்ந்து ஆறு மாதங் கட்கு வதிய எண்ணியுள்ள ஒரு தனிப்பட்டவர்.

(3) எழுத்தில் உள்ள சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கையில் இணைக்கப்பட்ட ஒரு கூட்டு நிலையம் அல்லது இணைக்கப்பட்ட ஒரு அமைப்பு.

(4) இலங்கையில் தொழிற்பட்டுவரும் வெளிநாட்டுச் சட்டங் களுக்கு இணங்க நிறுவப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட கூட்டு நிலையத்தின் ஒரு பிரிவு அல்லது அலுவலகம், ஒரு கிளை, ஒரு இணைப்பு, விரிவாக்கம் என்பவை.

13. இச்சுற்றறிக்கையில் சுட்டப்பட்டுள்ளஏற்பாடுகளை இலங்கைமத்தியவங்கி காலத்துக்குக்காலம் திருத்தியமைக்கவோ, மாற்றவோ, திருத்தவோ முடியும்.

14. பின்வரும் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் இலங்கை மத்திய வங்கியின் சார்பில் நடவடிக்கை எடுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ள வர்களாவர் :

| | | |
|---|---|---|
| பந்தி 3 | — | வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் |
| ,, 4 | (உ) | செலாவணிக்கட்டுப்பாட்டாளர் |
| ,, 5 | (அ) | முதன்மைக்கணக்காளர் |
| ,, 7 | (அ) | செலாவணிக்கட்டுப்பாட்டாளர் |
| ,, 7 | (ஆ) | முதன்மைக் கணக்காளர் |
| ,, 8 | | வங்கி மேற்பார்வைப்பணிப்பாளர் |
| ,, 10 | | வங்கி மேற்பார்வைப்பணிப்பாளரும், பொருளாதார ஆராய்ச்சிப்பணிப்பாளரும். |
| ,, 11 | | வங்கி மேற்பார்வைப்பணிப்பாளர் |
| ,, 12 | (ஆ) | வங்கி மேற்பார்வைப்பணிப்பாளர் |
| ,, 12 | (உ) | முதன்மைக் கணக்காளர் |
| ,, 13 | | செலாவணிக்கட்டுப்பட்டாளர் |

வெ. சி, சுப்பிரமணியம்
முதன்மைக்கணக்காளர்

ஏ. ஆர். பர்ணந்து
செலாவணிக்கட்டுப்பாட்டாளர்

சுற்றறிக்கை எண். 381 (வெ.நா,வ.தி. 2/79)

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண். 590,
கொழும்பு 1.
1979 மே, 17

எல்லா வர்த்தக வங்கிகளுக்கும்.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்

1979.05.02ஆம் நாளைய சுற்றறிக்கை எண் 380 (வெ நா.வ.தி. 1/79) 12(ஈ) ஆகிய பிரிவுகளுக்கு வர்த்தக வங்கிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. மேற் குறிப்பிடப்பட்டபடி குறிக்கப்பட்ட நாணயங்கள் என்று கூறப்பட்டவை தற் போதைக்கு ஐக்கிய அமெரிக்க டொலரும், ஸ்டேர்லிங் பவுணும் ஆகும்.

வெ. சி. சுப்பிரமணியம்
முதன்மைக் கணக்காளர்.

சுற்றறிக்கை எண் 395

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண். 590
கொழும்பு 1.
1979 யூன், 25.

வர்த்தக வங்கிக் கொடுகடன்

1978 ஒகத்து 7ஆம் நாளின் 317ஆம் எண்கொண்ட சுற்றறிக்லக தொடர்பாக மேற்கூறிய சுற்றறிக்கை மூலம் கூட்டுத்தாபனங்கட்கான கொடுகடன்கள் மீது ஏற்படுத்தப்பட்டிருந்த உச்சவரம்பு இலண்டன் ஏலங்கட்கு தேயிலை அனுப்புவதற்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் மக்கள் தோட்ட அபிவிருதிச்சபைக்கும் (ம. தோ. அ. ச.) வழங்கப்பட்ட முற்பணங்களைப் பொறுத்தவரையில் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் வர்த்தக வங்கிகட்கு அறிவிக்கப்படுகிறது

வெ. சி. சுப்பிரமணியம்
முதன்மைக் கணக்காளர்.

டபிள்யூ. இராசபுத்ரம்
ஆளுநர்.

சுற்றறிக்கை எண் 418

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண். 590,
கொழும்பு 1.
1979 செத்தெம்பர், 4.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

1978 ஒகத்து 7ஆம் நாளைய மத்திய வங்கி சுற்றறிக்கை எண் 317இல் குறிப்பிடப்பட்டவாறு வர்த்தக வங்கிகள், அரச கூட்டுத்தாபனங்களுக்கும், நியதிச் சட்டசபைகள், நிதி, கடன் வழங்கும் நிறுவனங்கள் நீங்கலாக ஏனையவற்றிற்கு முற்பணம் வழங்குவதில் இருந்த கட்டுப்பாடுகள் மீளப்பெறப்பட்டுள்ளன என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வெ. சி. சுப்பிரமணியம்
முதன்மைக் கணக்காளர்.

எச். என். எஸ். கருணாதிலக
மூத்த துணை ஆளுநர்.

சுற்றறிக்கை எண். 419

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண். 590,
கொழும்பு 1.
1979 செத்தெம்பர், 4.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

1979 செத்தெம்பர் 4ஆம் நாள் தொடக்கம் மத்திய வங்கியிடமிருந்து வங்கி வீதத்தில் பெறப்பட்ட வங்கியின் கடன்பாடுகளின் வெளிநிற்கும் மட்டம் 1979 யூன் 30இல் உள்ளபடியான பின்வரும் சொத்து விடயங்களின் 4 வீதத்துக்கு மேற்படக்கூடாது என வர்த்தக வங்கிக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

(1) கழிவு செய்யப்பட்டதும், நிதியீட்டம் செய்யப்பட்டதுமான உண்டியல்கள்;

(2) கடன்கள் (அரசின் வேளாண்மைக் கொடுகடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் நீங்கலாக)

(3) மேலதிகப் பற்றுக்கள்

மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்பாடுகள் என்பன இங்கு அது, வேளாண்மைக் கொடுகடன் திட்டங்கள், உத்தரவாத விலைத்திட்டம், நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியம் என்பவற்றின்கீழ வழங்கப்பட்ட மீள நிதியிடல்களைத் தவிர்க்கின்றது.

எனினும், மத்திய வங்கி, தற்காலிக பணக்கட்டுப்பாடுகளை ஈடுசெய்வதற்காக வர்த்தக வங்கிகளிடமிருந்து குறிக்கப்பட்ட எல்லைக்கு மேல் கடனுக்கான விண்ணப்பங்களை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும். அத்தகைய வசதிகள் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்.

(i) குறிக்கப்பட்ட அளவிற்குமேல்
முதல் 10 சதவீதத்துக்கு — ஆண்டுக்கு 15%

(ii) குறிக்கப்பட்ட அளவிற்குமேல்
இரண்டாவது 10 சதவீதத்துக்கு — ஆண்டுக்கு 16%

(iii) குறிக்கப்பட்ட அளவிற்கு மேல்
மூன்றாவது 10 சதவீதத்துக்கு — ஆண்டுக்கு 18%

(iv) குறிக்கப்பட்ட, அளவிற்கு மேல்
நான்காவது 10 சதவீதத்துக்கு — ஆண்டுக்கு 20%

(v) குறிக்கப்பட்ட அளவுக்கு மேல்
ஐந்தாவது 10 சதவீதத்துக்கு — ஆண்டுக்கு 22%

(vi) எஞ்சியதற்கு — ஆண்டுக்கு 25%

1977 ஒற்றோபர் 16ஆம் நாளின் எண் 258 கொண்ட மத்திய வங்கியின் சுற்றறிக்கை மீளப் பெறப்படுகின்றது. எனினும், 1976 நவெம்பர் 4ஆம் நாளின் சுற்றறிக்கை எண் 169இன் இரண்டாம் பந்தியின் விதிகள் நடைமுறையில் இருக்கும் அதாவது ஒவ்வொரு வர்த்தக வங்கியும் —

(அ) இன்றியமையாதனவற்ற தேவைகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் முற்பணங்கள் என்பவற்றின் மொத்தத் தொகை 1976ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆம் நாளின் அதே தேவைகட்காக வழங்கப்பட்டு வெளிநின்ற கடன்கள் முற்பணங்கள் என்பவற்றின் மொத்தத் தொகையைவிட விஞ்சாமலும்,

(ஆ) வங்கியல்லாத கூட்டு நிலையங்கட்கும், பொது மக்களுக்கும் அல்லது தவணைக் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கட்கும், கடன் வழங்கும் தொழில் செய்யும் தொழில் நிலையங்கட்கும் வழங்கப்பட்ட மொத்த கடன்கள் முற்பணங்கள் என்பவற்றின் தொகை 1976 யூன் 30ஆம் நாள் அத்தகைய கூட்டு நிலையங்கள், தொழில் நிலையங்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட்டு வெளிநின்ற மொத்தக் கடன்கள் முற்பணங்கள் என்பவற்றின் தொகையைவிட விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

வெ. சி. சுப்பிரமணியம்
முதன்மைக் கணக்காளர்.

எச் என். எஸ். கருணதிலக
மூத்த துணை ஆளுநர்

தொடர்பு எண் வெ நா வ தி 3/79/வ நா எப்/1049/79

வங்கித் தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு - 1.
1979 செத்தெம்பர், 28.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் வ நா 29/79
எல்லா வர்த்தக வங்கிகட்கும்

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்
குறிப்பிடப்பட்ட நாணயங்கள்

தயவு செய்து எங்களது 1979 மே 2 ஆம் நாளின் சுற்றறிக்கை எண் 380 (வெ நா வ தி 1/79) ஐப் பார்க்குக.

மேற் குறிக்கப்பட்ட சுற்றறிக்கையின் 14 ஆம் பிரிவின் நியதிகட்கமைய பின்வரும் நாணயங்கள் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவுக்கான தேவைகட்காக குறிப்பிடப்பட்ட நாணயங்களாக்கப்பட்டுள்ளன;

பிரான்சிய பிராங்குகள்
யப்பானிய யென்
நெதர்லாந்து கில்டர்கள்
பவுண் ஸ்டேர்லிங்
சுவிடிசு குரோனர்
சுவிசு பிராங்குகள்
ஐக்கிய அமெரிக்க டொலர்கள்
மேற்கு செர்மன் மார்க்குகள்

எச். பிரேமரத்ன
பதில் முதன்மைக் கணக்காளர்

சுற்றறிக்கை எண் வெ நா வ தி 4/79

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு-1.
1978 ஒற்றோபர் 29

## வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்

1979.05.02 ஆம் நாளின் (வெ நா வ தி 1/79) சுற்றறிக்கை எண் 380 தொடர்பாக,

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் நியதிகளின்படி 14ம் பந்தியை ஒப்பிடுகையில் கீழே தரப்பட்டுள்ளவாறு ஏற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன

6. (அ) பந்தியை நீக்கிப் பின்வரும் பந்தியை 6 (அ) உள்ள இடத்தில் அதற்குப் பதிலாக இடவும்.

"6. (அ) ஒரு வெ நா வ தி ஆன கேள்வி வைப்புக்களை (ஆனால் காசோலை மூலம் நிதியை மீளப்பெறக்கூடிய சேமிப்புக் கணக்குகளையோ, கணக்குகளையோ தொடங்கக் கூடாது) ஒத்த குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத்தினைக் கொ பெ பொ ஆ முயற்சியாளர்களின் எந்த வதிவுகாரர்களிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளலாமெனினும் அத்தகைய முயற்சியாளரின் வெளிநாட்டு நாணய வருவாய்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்" பணிகள் மூலம் பெறப்பட்டவையானால் வைப்புக்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது."

வெ. சி சுப்பிரமணியம்
முதன்மைக் கணக்காளர்

ஏ. ஆர் பரனுந்து
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

சுற்றறிக்கை எண் வெ நா வ தி 5/79

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு-1.
1979 நவெம்பர் 02

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்

1979 05.22 நாளின் சுற்றறிக்கை எண் 380 இன் (வெ நா வ தி 1/79) 4 (ஈ) பந்தி தொடர்பாக.

ஒரு வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக்கு (வெ நா வ பி) இத்தால் பின்வருவனவற்றுக்கு ஒட்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(அ) கொடுகடன் சான்றிதழ்கள் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் இருக்குமிடத்து கொடுகடன் சான்றிதழ்களை நிறுவுதல் தொடங்குதல் அறிவுறுத்தல் என்பவற்றுக்கும்; மேலும் ;-

(i) கடனைத் தொடங்குவதற்கு ஒரு பதிவாளரல்லாதவராக அல்லது கொ. பெ. பொ. ஆ. வின் முயற்சியாளராக அல்லது 1979.05.02ஆம் நாளின் சுற்றறிக்கை எண் 389 (வெ. நா. வ. தி. 1/79) 7 (அ) பந்தியின் கீழ் இலங்கை மத்திய வங்கியினல் பெயர் மூலம் குறிப்பாக ஒப்புதலளிக்கப்பட்ட ஒருவராக இருக்குமிடத்து,

(ii) பெறுபவர் வதிவாளரல்லாதவராக அல்லது கொ பெ பொ ஆ வின் முயற்சியாளராக அல்லது 1979.05.02 நாளின் சுற்றறிக்கை எண் 380 (வெ நா வ தி 1/79) 7 (அ) பந்தியின் கீழ் இலங்கை மத்திய வங்கியினல் பெயர் மூலம் குறிப்பாக ஒப்புதலளிக்கப்பட்ட ஒருவராக இருக்குமிடத்து

(ஆ) உத்தரவாதம் உறுதி அல்லது இழப்பெதிர்க்காப்புகள் அல்லது அத்தகைய பொறுப்பேற்றல்கள் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வெளியிடப்பட்டு இருக்குமிடத்து அத்தகைய உத்தரவாதங்கள் உறுதிகள் அல்லது இழப்பெதிர்க்காப்பு அவற்றையொத்த பொறுப்பேற்றல்களை வழங்கவும் புதுப்பிக்கவும் அத்துடன், மேலும்

(i) அத்தகைய ஒவ்வொரு உத்தரவாதமும், இழப்பெதிர்க்காப்பு உறுதியும் அல்லது பொறுப்பேற்றலும் ஒரு வதிவாளரல்லாதவர் சார்பில் அல்லது கொ பெ பொ ஆ முயற்சியாளர் சார்பில் அல்லது 1979.05 02 நாளின் சுற்றறிக்கை எண் 380 (வெ. நா. வ. தி. 1/79) 7 (அ) பந்தியின்கீழ் இலங்கை மத்திய வங்கியினல் பெயர்மூலம் குறிப்பிடப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட ஏனைய வதிவாளராகவோ இருக்குமிடத்து

(ii) அத்தகைய ஒவ்வொரு உத்தரவாதமும், இழப்பெதிர்க்காப்புறுதி அல்லது பொறுப்பேற்றலும் ஒரு வதிவினரல்லாதவர் சார்பில் அல்லது கொ பெ பொ ஆ முயற்சியாளர் சார்பில் அல்லது 1979 05.02 நாளின் சுற்றறிக்கை எண் 380 (வெ நா வ தி 1/79) 7 (அ) பந்தியின்கீழ் இலங்கை மத்திய வங்கியினுல் பெயர் குறிப்பிடப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு ஏனைய வதிவாளருக்காக இருக்குமிடத்தும்

(இ) வதிவற்ற ஒருவரிற்கு அல்லது கொ பெ ஆ கு வின் முயற்சியாளர் ஒருவரிற்கு அல்லது 1979.05 02 ஆம் நாளின் சுற்றறிக்கை எண் 380 (வெநாவதி 1/79) இன் பந்தி 7 (அ) வின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் பெயர்சுட்டி சிறப்பாக ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு வதிவற்றவரிற்கு உண்டியல்களை கழிவு செய்யலாம். அல்லது அத்தகையவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும் அவ்வாறு கழிவு செய்யப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்டியல்கள் வெளிநாட்டு நாணயத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| வெ. சி. சுப்பிரமணியம் | ஏ. ஆர். பர்ணுந்து |
| முதன்மைக் கணக்காளர் | செலாவணிக்கட்டுப்பாட்டாளர் |

## ஆசிய நாணயக்கூறு, வங்காள தேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபாய், தந்தி மாற்றங்களுக்கான மத்திய

### ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாகத்

| நாள் | சுற்றறிக்கைகளின் எண் | ஆசிய நாணயக்கூறு | | வங்காளதேச தக்கா | | பர்மிய கியத் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கொள்வனவு உடன்* | விற்பனவு உடன்* | கொள்வனவு உடன்‡ | விற்பனவு உடன்‡‡ | கொள்வனவு உடன்‡ | விற்பனவு உடன்‡‡ |
| 79.01.02 | 355 | 2029.45 | 2029.95 | 102.85 | 102.97 | 238.50 | 238.62 |
| 79.01.10 | 358 | 2003.10 | 2003.60 | 101.52 | 101.64 | 235.40 | 235.52 |
| 79.02.07 | 360 | 2000.55 | 2001.05 | 99.39 | 99.51 | 235.10 | 235.22 |
| 79.03.05 | 363 | 1995.40 | 1995.90 | 99.43 | 99.55 | 234.49 | 234.61 |
| 79.03.16 | 366 | 1995.60 | 1996.10 | 101.23 | 101.35 | 234.52 | 234.64 |
| 79.04.02 | 368 | 1992.70 | 1993.20 | 101.33 | 101.45 | 234.18 | 234.30 |
| 79.04.04 | 370 | 1992.70 | 1993.20 | 102.88 | 103.00 | 234.18 | 234.30 |
| 79.04.11 | 373 | 1992.70 | 1993.20 | 104.22 | 104.34 | 234.18 | 234.30 |
| 79.04.18 | 375 | 1987.55 | 1988.05 | 104.42 | 104.54 | 233.57 | 233.69 |
| 79.05.02 | 377 | 1977.60 | 1978.10 | 99.19 | 99.31 | 232.40 | 232.52 |
| 79.05.08 | 381 | 1977.60 | 1978.10 | 100.80 | 100.92 | 232.40 | 232.52 |
| 79.05.17 | 384 | 1974.10 | 1974.60 | 99.11 | 99.23 | 231.99 | 232.11 |
| 79.05.18 | 386 | — | — | — | — | — | — |
| 79.06.01 | 388 | 1966.50 | 1967.00 | 99.13 | 99.25 | 231.09 | 231.21 |
| 79.06.06 | 390 | — | — | 96.61 | 96.73 | — | — |
| 79.06.18 | 393 | 1963.15 | 1963.65 | 98.20 | 98.32 | 230.70 | 230.82 |
| 79.06.25 | 396 | 1989.55 | 1990.05 | 99.52 | 99.64 | 233.81 | 233.93 |
| 79.06.27 | 398 | 2004.30 | 2004.80 | 100.26 | 100.38 | 235.54 | 235.66 |
| 79.07.02 | 400 | 2010.00 | 2010.50 | 101.55 | 101.67 | 236.21 | 236.33 |
| 79.07.11 | 403 | — | — | 104.62 | 104.74 | — | — |
| 79.07.16 | 405 | 2021.70 | 2022.20 | 104.97 | 105.09 | 237.58 | 237.70 |
| 79.08.10 | 409 | 2044.70 | 2045.20 | 107.83 | 107.95 | 240.29 | 240.41 |
| 79.08.16 | 412 | 2032.75 | 2033.25 | 105.33 | 105.45 | 238.89 | 239.01 |
| 79.08.22 | 414 | — | — | 99.87 | 99.99 | — | — |
| 79.09.03 | 416 | 2028.40 | 2028.90 | 101.00 | 101.12 | 238.37 | 238.49 |
| 79.09.17 | 421 | 2030.80 | 2031.30 | 100.93 | 101.05 | 238.65 | 238.77 |
| 79.09.18 | 423 | — | — | 97.98 | 98.10 | — | — |
| 79.10.01 | 426 | 2034.35 | 2034.85 | 96.63 | 96.75 | 239.07 | 239.19 |
| 79.10.16 | 430 | 2047.70 | 2048.20 | 98.14 | 98.26 | 240.67 | 240.76 |
| 79.10.22 | 432 | — | — | — | — | — | — |
| 79.10.30 | 435 | 2024.45 | 2024.95 | 95.26 | 95.38 | 237.91 | 238.03 |
| 79.11.06 | 437 | 2021.30 | 2021.80 | 94.03 | 94.15 | 237.54 | 237.66 |
| 79.11.22 | 442 | 2014.05 | 2014.55 | 96.41 | 96.53 | 236.68 | 236.80 |
| 79.11.26 | 444 | — | — | — | — | — | — |
| 79.12.07 | 447 | 2057.90 | 2058.40 | 98.95 | 99.07 | 241.84 | 241.96 |
| 79.12.17 | 449 | 2048.05 | 2048.55 | 98.47 | 98.59 | 240.68 | 240.80 |

* கொள்வனவு உடன் மாற்றுக்கு மாதமொன்றுக்கான கழிவு –/50 சதங்கள்

** விற்பனவு உடன்மாற்றுக்கு மாதமொன்றுக்கான கழிவு –/50 சதங்கள்.

‡ கொள்வனவு உடன்மாற்றுக்கு மாதமொன்றுக்கான கழிவு –/06 சதங்கள்

## ஈரானிய ரியால், நேபாள ரூபாய், பாகிஸ்தான் ரூபாய் ஆகியவற்றின் வங்கியின் செலாவணி வீதங்கள்

**தொழிற்படுபவைக்கே இவை ஏற்புடையன**

(ஒவ்வொரு நாணயத்தினதும் 100 கூறுகளுக்கான ரூபாய்)

| இந்திய ரூபாய் | | ஈரானிய ரியால் | | நேபாள ரூபாய் | | பாகிஸ்தான் ரூபாய் | |
|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு உடன்‡ | விற்பனவு உடன் ‡‡ | கொள்வனவு உடன்‡ | விற்பனவு உடன் ‡‡ | கொள்வனவு உடன் ‡ | விற்பனவு உடன் ‡‡ | கொள்வனவு உடன்‡ | விற்பனவு உடன் ‡‡ |
| 190.44 | 190.56 | 22.22 | 22.26 | 130.56 | 130.68 | 158.15 | 158.27 |
| 187.96 | 188.08 | 21.93 | 21.97 | 128.87 | 128.99 | 156.09 | 156.21 |
| 187.53 | 187.65 | 21.90 | 21.94 | 128.70 | 128.82 | 156.33 | 156.45 |
| 188.32 | 188.44 | 21.85 | 21.89 | 128.73 | 128.85 | 156.33 | 156.45 |
| 188.72 | 188.84 | 21.97 | 22.01 | 129.06 | 129.18 | 156.33 | 156.45 |
| 187.77 | 187.89 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 190.66 | 190.78 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 193.13 | 193.25 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 189.85 | 189.97 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 185.27 | 185.39 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 188.27 | 188.39 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 185.13 | 185.25 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 187.86 | 187.98 | — | — | — | — | — | — |
| 188.05 | 188.17 | 21.97 | 22.01 | 129.07 | 129.19 | 156.33 | 156.45 |
| 190.55 | 190.67 | — | — | — | — | — | — |
| 189.95 | 190.07 | 21.97 | 22.01 | 129.06 | 129.18 | 156.33 | 156.45 |
| 192.12 | 192.24 | 21.97 | 22.01 | 129.06 | 129.18 | 156.33 | 156.45 |
| 193.55 | 193.67 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 193.97 | 194.09 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 196.77 | 196.89 | — | — | — | — | — | — |
| 194.82 | 194.94 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 196.27 | 196.39 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 193.16 | 193.28 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| — | — | — | — | — | — | — | — |
| 193.09 | 193.21 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 194.69 | 193.81 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 189.01 | 189.13 | — | — | — | — | — | — |
| 189.06 | 189.18 | 22.13 | 22.17 | 130.02 | 130.14 | 157.49 | 157.61 |
| 191.97 | 192.09 | 22.16 | 22.20 | 130.21 | 130.33 | 157.72 | 157.84 |
| — | — | 22.42 | 22.46 | 131.71 | 131.83 | 159.53 | 159.65 |
| 186.36 | 186.48 | 22.16 | 22.20 | 130.21 | 130.33 | 157.72 | 157.84 |
| 189.17 | 189.29 | 22.17 | 22.21 | 130.25 | 130.37 | 157.76 | 157.88 |
| 194.07 | 194.19 | 22.18 | 22.22 | 130.31 | 130.43 | 157.85 | 157.97 |
| 191.31 | 191.43 | — | — | — | — | — | — |
| 195.47 | 195.59 | 22.18 | 22.22 | 130.31 | 130.43 | 157.85 | 157.97 |
| 191.67 | 191.79 | 22.18 | 22.22 | 130.32 | 130.44 | 157.85 | 157,97 |

‡‡ விற்பனவு உடன்மாற்றுக்கு மாதமொன்றுக்கான ஒப்பப்பணம் –/04 சதங்கள்
வர்த்தக வங்கியின் விருப்பின் பேரில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படலாம். ஆனால் ஒப்பந்தகாலம் முடிவுக்கு முன்பாயின் ஒப்பந்தஞ்செய்த செலாவணி வீதத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

# ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஊடாகத் தொழிற்படுபவற்றிற்கான வர்த்தக வங்கிகளின் செலாவணி வீதங்கள்

| நாள் | சுற்றறிக்கை எண் | ஆசிய நாணயக் கூறு (ஆ. நா. கூ. 100/–க்கு) | | வங்காளதேச தக்கா (தக்காக்கள் 100க்கு) | | பர்மிய இயத் (இயத்துக்கள் 100க்கு) | | இந்திய ரூபாய் (ரூபாய் 100க்கு) | | ஈரானிய ரியால் (ரியால் 100க்கு) | | நேபாள ரூபாய் (ரூபா 100/–க்கு) | | பாக்கிஸ்தான் ரூபாய் (ரூபா 100–க்கு) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொள்வனவு | விற்பனவு | கொள்வனவு | விற்பனவு | கொள்வனவு | விற்பனவு | கொள்வனவு | விற்பனவு | கொள்வனவு | விற்பனவு | கொள்வனவு | விற்பனவு | கொள்வனவு | விற்பனவு |
| 79.01.02 | 356 | மத்திய வங்கியின் கொள்வனவு வீதத்திலும் குறைந்தும் ரூ. 1.50 இற்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும் | மத்திய வங்கியின் விற்பனவு வீதத்திலும் அதிகரித்தும் ரூ. 3.00 இற்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும் | 102.79 | 103.01 | 238.44 | 238.66 | 190.38 | 190.60 | 22.16 | 22.30 | 130.50 | 130.72 | 158.09 | 158.31 |
| 79.01.10 | 359 | | | 101.46 | 101.68 | 235.34 | 235.56 | 187.90 | 188.12 | 21.87 | 22.01 | 128.81 | 129.03 | 156.03 | 156.25 |
| 79.02.07 | 361 | | | 99.33 | 99.55 | 235.04 | 235.26 | 187.47 | 187.69 | 21.84 | 21.98 | 128.64 | 128.86 | 156.27 | 156.49 |
| 79.03.05 | 364 | | | 99.37 | 99.59 | 234.43 | 234.65 | 188.26 | 188.48 | 21.79 | 21.93 | 128.67 | 128.89 | 156.27 | 156.49 |
| 79.03.16 | 367 | | | 101.17 | 101.39 | 234.46 | 234.68 | 188.66 | 188.88 | 21.91 | 22.05 | 129.00 | 129.22 | 156.27 | 156.49 |
| 79.04.02 | 369 | | | 101.27 | 101.49 | 234.12 | 234.34 | 187.71 | 187.93 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.04.04 | 371 | | | 102.82 | 103.04 | 234.12 | 234.34 | 190.60 | 190.82 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.04.11 | 374 | | | 104.16 | 104.38 | 234.12 | 234.34 | 193.07 | 193.29 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.04.18 | 376 | | | 104.36 | 104.58 | 233.51 | 233.73 | 189.79 | 190.01 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.05.02 | 378 | | | 99.13 | 99.35 | 232.34 | 232.56 | 185.21 | 185.43 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.05.08 | 382 | | | 100.74 | 100.96 | 232.12 | 232.56 | 188.21 | 188.43 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.05.17 | 385 | | | 99.05 | 99.27 | 231.93 | 232.15 | 185.07 | 185.29 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.05.18 | 387 | | | — | — | — | — | 187.80 | 188.02 | — | — | — | — | — | — |
| 79.06.01 | 389 | | | 99.07 | 99.29 | 231.03 | 231.25 | 187.99 | 188.21 | 21.91 | 22.05 | 129.01 | 129.23 | 156.27 | 156.49 |
| 79.06.06 | 391 | | | 96.55 | 96.77 | — | — | 190.49 | 190.71 | — | — | — | — | — | — |
| 79.06.18 | 394 | | | 98.14 | 98.36 | 230.64 | 230.86 | 189.89 | 190.11 | 21.91 | 22.05 | 129.00 | 129.22 | 156.27 | 156.49 |
| 79.06.25 | 397 | | | 99.46 | 99.68 | 233.75 | 233.97 | 192.06 | 192.28 | 21.91 | 22.05 | 129.00 | 129.22 | 156.27 | 156.49 |
| 79.06.27 | 399 | | | 100.20 | 100.42 | 235.48 | 235.70 | 193.49 | 193.71 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.07.02 | 401 | | | 101.49 | 101.71 | 236.15 | 236.37 | 193.91 | 194.13 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.07.11 | 404 | | | 104.56 | 104.78 | — | — | 196.71 | 196.93 | — | — | — | — | — | — |
| 79.07.16 | 406 | | | 104.91 | 105.13 | 237.52 | 237.74 | 194.76 | 194.98 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.08.10 | 410 | | | 107.77 | 107.99 | 240.23 | 240.45 | 196.21 | 196.43 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.08.16 | 413 | | | 105.27 | 105.49 | 238.83 | 239.05 | 193.10 | 193.32 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.08.22 | 415 | | | 99.81 | 100.03 | — | — | — | — | — | — | — | — | — | — |
| 79.09.03 | 417 | | | 100.94 | 101.16 | 238.31 | 238.53 | 193.03 | 193.25 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.09.17 | 422 | | | 100.87 | 101.09 | 238.59 | 238.89 | 194.63 | 194.85 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.09.18 | 424 | | | 97.92 | 98.14 | — | — | 188.95 | 189.17 | — | — | — | — | — | — |
| 79.10.01 | 427 | | | 96.57 | 96.79 | 239.01 | 239.23 | 189.00 | 189.22 | 22.07 | 22.21 | 129.96 | 130.18 | 157.43 | 157.65 |
| 79.10.16 | 431 | | | 98.08 | 98.30 | 240.58 | 240.80 | 191.91 | 192.13 | 22.10 | 22.24 | 130.15 | 130.37 | 157.66 | 157.88 |
| 79.10.22 | 433 | | | — | — | — | — | — | — | 22.36 | 22.50 | 131.65 | 131.87 | 159.47 | 159.69 |
| 79.10.30 | 436 | | | 95.20 | 95.42 | 237.85 | 238.07 | 186.30 | 186.52 | 22.10 | 22.24 | 130.15 | 130.37 | 157.66 | 157.88 |
| 79.11.06 | 438 | | | 93.97 | 94.19 | 237.48 | 237.70 | 189.11 | 189.33 | 22.11 | 22.25 | 130.19 | 130.41 | 157.70 | 157.92 |
| 79.11.22 | 443 | | | 96.35 | 96.57 | 236.62 | 236.84 | 194.01 | 194.23 | 22.12 | 22.26 | 130.25 | 130.47 | 157.79 | 158.01 |
| 79.11.26 | 445 | | | — | — | — | — | 191.25 | 191.47 | — | — | — | — | — | — |
| 79.12.07 | 448 | | | 98.89 | 99.11 | 241.78 | 242.00 | 195.41 | 191.63 | 22.12 | 22.26 | 130.25 | 130.47 | 157.79 | 158.01 |
| 79.12.17 | 450 | | | 98.41 | 98.63 | 240.62 | 240.84 | 191.61 | 191.83 | 22.12 | 22.26 | 130.26 | 130.48 | 157.79 | 158.01 |

## வர்த்தக வங்கிகளிடமிருந்தான வெளிநாட்டு நாணயத் தாள்களின்

| சுற்றறிக்கை எண்ணும் நடைமுறைக்கு வந்த நாளும் | | | அவுத்திரேலிய டொலர் (டொலர் 1 இற்கு) | ஒசுத்திரிய சிலிங் (சிலிங் 100 இற்கு) | பாரெய்ன் தினார்கள் தினார் 1 இற்கு | பெல்சியம் பிராங்கு பிராங் 100 இற்கு | கனடிய டொலர் டொலர் 1 இற்கு | டெனிச குரோனர் குரோனர் 10 இற்கு | டொச் (மேற்கு செர்மனி) டொச மார்க் 10 இற்கு | பிரெஞ்சு பிராங்கு பிராங்கு 10 இற்கு | ஹொங்கொங் டொலர் டொலர் 10 இற்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 357 | சனவரி | 05, 1979 | 16.65 | 107.65 | 37.90 | 49.95 | 12.25 | 28.35 | 78.75 | 34.35 | 30.60 |
| 362 | பெப்புருவரி | 13, 1979 | 16.55 | 107.75 | 38.00 | 49.85 | 12.20 | 28.45 | 78.75 | 34.30 | 30.35 |
| 365 | மாச்சு | 06, 1979 | 16.35 | 107.05 | 37.90 | 49.65 | 12.25 | 28.05 | 78.40 | 34.00 | 30.20 |
| 372 | எப்பிறல் | 09, 1979 | 16.55 | 107.05 | 38.70 | 49.65 | 12.90 | 28.30 | 78.55 | 34.30 | 29.55 |
| 383 | மே | 14, 1979 | 16.60 | 107.00 | 38.95 | 49.40 | 12.85 | 27.95 | 78.85 | 34.10 | 29.60 |
| 392 | யூன் | 13, 1979 | 16.55 | 106.30 | 39.00 | 48.75 | 12.75 | 27.15 | 78.35 | 33.85 | 29.15 |
| 402 | யூலை | 06, 1979 | 16.80 | 111.70 | 39.10 | 51.05 | 12.85 | 28.40 | 81.85 | 35.20 | 29.30 |
| 407 | யூலை | 26, 1979 | 17.00 | 112.25 | 39.35 | 51.80 | 12.80 | 28.80 | 82.70 | 35.50 | 28.90 |
| 408 | ஒகத்து | 03, 1979 | 16.90 | 112.05 | 39.45 | 51.10 | 12.75 | 28.35 | 81.75 | 35.20 | 29.05 |
| 411 | ஒகத்து | 13, 1979 | 16.95 | 113.10 | 39.45 | 51.50 | 12.80 | 28.60 | 82.50 | 35.40 | 29.05 |
| 420 | செத். | 10, 1979 | 16.90 | 114.90 | 39.45 | 51.65 | 12.85 | 28.75 | 83.00 | 35.50 | 29.45 |
| 425 | செத். | 24, 1979 | 16.90 | 114.90 | 39.45 | 51.65 | 12.85 | 28.75 | 83.00 | 35.50 | 29.45 |
| 428 | ஒற்ரோபர் | 10, 1979 | 16.85 | 116.80 | 39.55 | 52.10 | 12.80 | 28.75 | 84.10 | 35.85 | 30.30 |
| 429 | ஒற்ரோபர் | 12, 1979 | 16.80 | 117.25 | 39.55 | 51.95 | 12.80 | 28.70 | 83.85 | 35.70 | 30.05 |
| 434 | ஒற்ரோபர் | 23, 1979 | 16.65 | 116.15 | 39.30 | 51.80 | 12.70 | 28.60 | 83.35 | 35.60 | 29.90 |
| 439 | நவெம்பர் | 13, 1979 | 16.45 | 116.15 | 40.75 | 52.00 | 12.65 | 28.45 | 84.05 | 35.85 | 30.00 |
| 446 | நவெம்பர் | 29, 1979 | 16.30 | 118.70 | 39.60 | 52.50 | 12.75 | 28.75 | 85.50 | 36.40 | 29.90 |

## கொள்வனவுக்கான மத்திய வங்கியின் செலாவணி வீதங்கள்

| இத்தாலிய லீரா லீரா 1000 இற்கு | யப்பானிய யென் யென் 1000 இற்கு | குவைத் தினார் தினார் 1 இற்கு | மலேசியா ரிங்கிட் ரிங்கிட் 10 இற்கு | நெதர்லாந்து கில்டர் கில்டர் 10 இற்கு | நோர்வே குரோனர் குரோனர் 10 இற்கு | ஓமானிய ரியால் ரியால் 1 இற்கு | குவாட்டர் ரியால் ரியால் 10 இற்கு | சவூதி அரேபியா ரியால் ரியால் 10 இற்கு | சிங்கப்பூர் டொலர் டொலர் 10 இற்கு | சுவீடன் குரோனர் குரோனர் 10 இற்கு | சுவீட்சர்லாந்து பிராங்கு பிராங்கு 10 இற்கு | ஐக்கிய அரபிய எமிரேற்ஸ் திர்ஹம் திர்ஹம் 10 இற்கு | ஐக்கிய இராச்சிய பவுண் பவுண் 1 இற்கு | ஐக்கிய அமெரிக்க டொலர் டொலர் 1 இற்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17.45 | 73.95 | 53.30 | 65.75 | 72.95 | 28.85 | 42.10 | 37.95 | 43.90 | 67.05 | 33.60 | 88.50 | 37.90 | 29.35 | 14.55 |
| 17.45 | 73.15 | 53.10 | 66.30 | 72.95 | 28.75 | 42.15 | 37.95 | 43.35 | 67.05 | 33.55 | 87.65 | 37.95 | 29.20 | 14.55 |
| 17.30 | 71.15 | 52.90 | 66.20 | 72.65 | 28.60 | 42.10 | 37.90 | 43.30 | 66.95 | 33.55 | 86.80 | 37.90 | 29.40 | 14.55 |
| 17.65 | 69.30 | 53.65 | 66.95 | 73.00 | 28.95 | 43.00 | 38.70 | 44.05 | 67.55 | 33.85 | 86.80 | 38.70 | 31.10 | 14.85 |
| 17.60 | 70.30 | 53.95 | 67.35 | 72.35 | 28.85 | 43.25 | 39.70 | 44.25 | 67.90 | 34.10 | 87.15 | 38.95 | 30.55 | 14.95 |
| 17.55 | 68.30 | 53.80 | 67.50 | 71.55 | 28.80 | 43.35 | 39.80 | 44.05 | 67.95 | 34.15 | 86.10 | 39.00 | 30.90 | 14.95 |
| 18.20 | 69.30 | 54.30 | 69.25 | 74.25 | 29.65 | 43.35 | 40.05 | 44.35 | 69.25 | 35.35 | 90.95 | 39.40 | 33.45 | 14.95 |
| 18.40 | 69.65 | 54.70 | 70.00 | 75.25 | 29.85 | 43.25 | 39.90 | 44.45 | 70.00 | 35.75 | 91.50 | 39.35 | 34.75 | 14.95 |
| 18.25 | 69.10 | 54.45 | 69.45 | 74.50 | 29.75 | — | 40.00 | 44.55 | 69.50 | 33.55 | 90.25 | 39.50 | 34.05 | 14.95 |
| 18.35 | 69.45 | 54.50 | 69.50 | 75.05 | 30.00 | 43.35 | 40.05 | 44.65 | 69.50 | 35.65 | 91.35 | 39.55 | 33.75 | 15.00 |
| 18.45 | 67.85 | 54.25 | 69.75 | 75.50 | 30.20 | 43.35 | 40.00 | 44.60 | 69.80 | 35.70 | 92.15 | 39.50 | 33.65 | 14.95 |
| 18.45 | 67.85 | 54.25 | 69.75 | 75.50 | 30.20 | 43.35 | 40.00 | 44.60 | 69.80 | 35.70 | 92.15 | 39.50 | 32.50 | 14.95 |
| 18.20 | 66.55 | 54.35 | 69.65 | 75.70 | 30.35 | 43.50 | 40.15 | 39.65 | 69.75 | 35.90 | 92.85 | 44.85 | 32.40 | 15.00 |
| 18.15 | 66.30 | 54.30 | 69.50 | 75.75 | 30.30 | 43.45 | 40.10 | 44.70 | 69.65 | 35.70 | 92.55 | 39.60 | 32.50 | 15.00 |
| 18.10 | 64.15 | 53.95 | 69.10 | 75.30 | 30.10 | 43.20 | 39.90 | 44.75 | 69.35 | 35.50 | 90.15 | 39.65 | 32.25 | 15.05 |
| 13.15 | 61.10 | 53.80 | 68.55 | 75.60 | 29.90 | 44.45 | 40.45 | 44.65 | 68.85 | 35.45 | 91.40 | 40.00 | 31.65 | 15.05 |
| 18.15 | 60.05 | 53.60 | 68.35 | 76.65 | 29.80 | 43.05 | 40.00 | 44.25 | 68.35 | 35.60 | 91.25 | 39.60 | 32.45 | 14.90 |